# பூத வழிபாடு, கிராம தேவதை - சில விசித்திரப் பழக்கங்களும் செய்திகளும்

-சாந்திப்பிரியா-

(nrj1945@gmail.com)

(*ஆன்மீக ஆலயம்*, டிஸம்பர் 2008 இதழில் வெளியான இந்த கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )



சுடலை, கருப்பசாமி, குதிரை வீரன், மதுரை வீரன், ஐயனார் போன்ற கிராம தேவதைகளின் பல்வேறு உருவங்கள்

இந்தியாவில் மட்டும் அல்ல, உலகின் அனைத்து இடங்களிலுமே ஆதிவாசிகளால் பூதம், பேய் போன்றவற்றிற்கு வழிபாடு செய்வது பல தலை முறைகளாகக் நடை பெற்றுக் கொண்டு வரும் பழக்க வழக்கம். அதற்குக் காரணம் மனித உடலில் இருந்து வெளியேறும் ஆத்மா உலகில் பல இடங்களிலும் ஆவிகளாக சுற்றிக் கொண்டு இருப்பதாகவும், அவற்றை உதாசீனப்படுத்தினால் அவை குடும்பத்தில் தீமையை விளைவிக்கும் என்ற பயத்துடன் கலந்த மூடக் நம்பிக்கைகளே மையமாக இருந்துள்ளது. மேலும் உடலில் இருந்து வெளியேறிய ஆவிகள் அடுத்தப் பிறவி எடுக்கும்வரை எதாவது ஒரு ஊரிலும் சுற்றிக் கொண்டுதான் இருக்கும் எனவும், அந்த நல்ல மற்றும் தீய ஆவிகள் சுற்றிக் கொண்டு இருப்பதினால்தான் ஊரில் நடக்கும்

நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் காரணம் எனவும் நம்பினர். இப்படிப்பட்ட நம்பிக்கைகளின் விளைவாகத் தோன்றியதே கிராம தேவதைகள் மற்றும் பூத வழிபாடுகள். இன்னும் ஒரு செய்தி என்ன எனில் மக்கள் விவசாயத் தொழிலை கிராமங்களில் துவக்கிய காலத்தில்தான் அப்படிப்பட்ட வழிபாட்டு முறைகள் தோன்றினவாம்.

அது மட்டும் அல்ல அந்த ஆவிகளில் பலவும் முன் பிறவிகளில் நம் குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம் எனவும் அவர்களை திருப்தி செய்வதின் மூலம் குடும்பத்திற்கு நன்மை கிடைக்கும் என நம்புகின்றனர். அகால மரணம் அடைந்தவர்கள் ஆவியாக சுற்றித் திரிகின்றனர், அவர்களை சிலர் மந்திர சக்திகளை கொண்டு தம்மிடம் பிடித்து வைத்திருக்கின்றனர் எனவும், அவைகளினால் தம்முடைய எதிரிகள் நமக்கு கெடுதல்களை விளைவிக்க முடியும் என்ற நம்பிக்கைகள் பரவலாக கிராமப்புறங்களில் உள்ளன. அதே நேரத்தில் அப்படிப்பட்ட நம்பிக்கைகளை ஒதுக்கித் தள்ளும் விதத்தில் பூதகணங்கள் ஆவிகள் அல்ல எனவும், மேலுலகில் தெய்வங்களுக்கு பாதுகாவலில் உள்ள கணங்களான அவை நம்மை காத்தருள பூமிக்கு அதே தெய்வங்களினால் அனுப்பப்பட்ட தேவதைகள் எனவும், தாம் குடியேறி உள்ள பகுதிகளை அவை காத்து வருகின்றன எனவும் ஒரு பிரிவினர் நம்புகின்றனர். பூதமோ, தேவதையோ அவற்றின் வழிபாடுபாடுகள் இடத்திற்கு இடம் மாறுபட்டு உள்ளது மட்டும் அல்ல அந்த கணங்களின் உருவம் கூட மாறுபட்டே உள்ளது.

பெரும்பாலும் கிராமப்புறங்களில் ஆலய விழாக்களிலும், சடங்குகளிலும் சிலருக்கு சாமி ஏறி அவர்கள் மயக்க நிலைகளுக்குச் செல்வது மிகச் சாதாரண விஷயம். சாமி ஏறி விட்டவர்கள் தான் அந்தக் கடவுள், இந்தக் கடவுள் என தம்மைப் பற்றி கூறியவண்ணம், அங்குள்ளவர்களுடைய குறைகளுக்கு பரிகாரம் கூறுவதும், குற்றவாளிகளை அடையாளம் காட்டுவதும், வர இருக்கும் அபாயத்தை எடுத்துக் கூறுவதும் சர்வ சாதாரணமாக நடப்பதினால் அந்த வழிபாட்டு முறைகள் புனிதமானதாகவும், பக்திபூர்வமாகவும் ஏற்கப்படுகின்றன. சாமி ஏறி உடல் வலிக்க பல மணி நேரம் ஆடியவர்கள் கூட எந்த விதமான சோர்வையும் வெளிக் காட்டாமல் புதுப் பொலிவோடு தன்னிலைக்குத் திரும்புவதைக் காணும் பொழுதும், சாமி பிடித்திருந்த நேரங்களில்

பிறருக்குத் தெரியாத பலரது அந்தரங்க வாழ்க்கையை வெளிப்படுத்துவதையும் காணும் பொழுது அதிசயமாகவே உள்ளது. என்ன சக்தி அவர்களை ஆட்கொள்கின்றது எனத் தெரியவில்லை என்றாலும் , எதோ இனம் புரியாத அமானுஷ்ய சக்தி உள்ளது என்பதை மட்டும் நம்ப வேண்டி உள்ளது. இரவு முழவதும் நடைபெறும் அந்த விழாக்களில் கடவுளின் சிலைகளும், பூஜைப் பொருட்களும் ஒருபுறத்தில் வைக்கப்பட்டு இருக்க மறுபுறம் பக்தர்கள் அமர்ந்து கொள்கின்றனர். அந்த நேரங்களில் எழுப்பப்படும் வாத்திய ஒலிகளும், மேளச் சத்தங்களும் அங்குள்ளவர்களுக்கு மனதில் பீதியை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளன. அமானுஷ்ய சக்திகளின் மீதான் பயமே பூத வழிபாடுகளுக்கும், கிராம தேவதைகளின் வழிபாட்டிற்கும் ஆரம்பமாக இருந்தன என பல ஆராய்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். கர்நாடக மானிலம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் புது வழிபாடுகளும், ஆராதனைகளும் நிறையவே உள்ளன.

ஒரு விதத்தில் பார்த்தால் பூத வழிபாடுகளும், கிராம தேவதைகளின் வழிபாடும் பேய், பிசாசுகளின் தொல்லைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளவே துவங்கின என்பதே உண்மை. கர்னாடக மானிலத்திலும், ஒரிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டின் சில உட்புறப் பகுதிகளிலும் இன்றும் பல விசித்திர பழக்க வழக்கங்களைக் கொண்ட வழிபாடு உண்டு. முக்கியமாக கிராமப்புறங்களில் மந்திர தந்திரங்களை உள்ளடக்கிய பழக்க முறைகள் நிறையவே உண்டு. கர்னாடகத்தில் கங்கே மாதா என்ற ஒரு பிரிவினர் முகத்தில் பல விதமான வண்ண முகமூடிகளை அணிந்த வண்ணம் வேப்பிலைகளை செருகிக் கொண்டு, இரத்தேஷ்வரி, மரியம்மா போன்ற கிராமிய பெண் தெய்வங்களை ஆராதனை செய்தபடி நடனம் ஆடுவதுண்டு. அவர்கள் ஆராதனையில் அணியும் முகமூடியின் வண்ணம் நல்ல மற்றும் தீய தேவதைகளின் ஆராதனையை எடுத்துக் காட்டுவதாக அமைந்து இருக்குமாம். பூதங்கள் மற்றும் பிசாசுகளுக்கு பலி தந்தும் இரத்தம் கொடுத்தும் அந்த ஆராதனைகள் துவங்குகின்றன. அவர்கள் அணிந்துள்ள முகமூடிக்கேற்ப அந்த சாமிகள் அவர்கள் உடலில் ஏறி அவர்கள் ஆடுவது உண்டு. அது போல கர்னாடகத்தில் பூத வழிபாடு துளு நாட்டுப் பகுதியிலும் நிறையவே உள்ளதாம். ஆதிவாசிகள் அதிகம் உள்ள அந்த இடம் கேரளத்தை ஒட்டியப் பகுதியாக

உள்ளதால் அவர்கள் ஆடும் நடனங்கள் யக்ஷகானம் போன்ற நடனக் கலையை ஒத்து உள்ளது. கேரளாவில் மந்திர தந்திரக் கலைகள் அதிகம் உண்டு. மங்களூரில் பூதகானா என்ற பூத வழிபாடு அதிகம். டிஸம்பர், மற்றும் ஜனவரி மாதங்களில் அந்த விழாக்கள் நடைபெறுகின்றன.

ஓன்பது மற்றும் பத்தாம் நூற்றாண்டுகளில் வடநாட்டில் ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேச மானிலத்தில் மோகினிகள் அல்லது யோகினிகள் என்ற பெண் தேவதைகளை பல கிராமத்தினர் பூஜித்து வணங்கி வந்தனர். அந்த யோகினிக்களில் அறுபத்தி நான்கு கலைகளை பிரதிபலிக்கும் வகையில் 64 யோகினிக்கள் உண்டாம். சில யோகினிகளுடைய முகம் விலங்கு போன்றும் அமைந்து உள்ளன. அந்த மானிலத்தில் கட்டப்பட்டுள்ள 9-10 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இரு ஆலயங்களில் உள்ள சிலைகள் அதற்கு சாட்சியாக உள்ளன. அந்த யோகினிக்கள் மாய தேவதைகள். கடவுளுக்கு முக்கியமாக பார்வதிக்கு பாதுகாவலர்கள் எனவும், அந்த ஆலயத்திற்கு மேல்பரப்பில் இன்னமும் மாய ஆவிகள் மற்றும் மோகினிப் பேய்கள் சுற்றித் திரிவதாக நம்பப் படுவதினால் தந்திர சக்தி கிடைக்க மந்திரவாதிகள் அங்கு வந்து பூஜிக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது. அதற்குள் நுழையவே படு பயங்கரமாக இருக்கும். அந்த மோகினிப் பேய்கள் இரவில் கூட்டமாக ஆகாயத்தில் திரிந்து கொண்டு இருக்கும் எனவும் அவர்கள் நகரைக் காப்பவர்கள் எனவும் நம்பிக்கைகள் உண்டு. ஆகவே அவர்களை ஆராதிப்பதின் மூலம் தமது கிராமம் பாதுகாக்கப்படும் என நம்பினர். பூதம் என்பதை ஆவிகள் என்ற தேவதைகள் எனக் கருதுகின்றனர். இப்படிப்பட்ட நம்பிக்கை தமிழ்நாடு, ஓரிஸா, ஆந்திரா மற்றும் ஸ்ரீலங்காவில் தமிழர் குடியேறிய பகுதிகளில் அதிகம் உண்டு.

தமிழ்நாட்டை பொறுத்தவரை பூதகணங்களாக ஐயனார், குதிரை வீரன், சுடலை, கருப்பனார்சாமி, நாகப்பசாமி, சன்னாசி, பேச்சியப்பன், லாட சன்யாசி, சப்பாணிக் கருப்பன், சின்ன கருப்பன், இடும்பன், வீரசாமி, காட்டேரி அம்மன், பச்சையம்மன், எல்லையம்மன் போன்ற கிராம தேவதைகளை ஆராதிக்கின்றனர். அவர்களுடைய மிகப் பெரிய உருவ சிலைகள், பொம்மைகள் கிராம எல்லைகளில் வைக்கப்பட்டு இருக்கும். அவர்கள் கைகளில் பெரிய வில், ஈட்டி, மற்றும் அரிவாள் போன்ற

ஆயுதங்கள் இருக்கும். முருகப் பெருமானுக்கு காவலில் உள்ள கடம்பன் போல, அம்மன் ஆலயங்களில் காவலில் உள்ள முனீஸ்வரரைப் போல இந்த தேவதைகள் உள்ளன. அவர்களை அந்தந்த மூல தெய்வங்களே தம்முடைய சார்பில் ஊர் காவலுக்கு அனுப்பி உள்ளன என்ற நம்பிக்கைகள் உள்ளன. அந்த தேவதைகள் ஊர் எல்லையில் காத்து நின்றபடி ஊருக்குள் நுழையும் பேய், பிசாசு மற்றும் தீய ஆவிகளை அடித்து விரட்டுமாம். கருப்பனார்சாமி என்ற பூதகணம் பல நேரங்களில் சில மக்களின் உடலில் புகுந்து கொண்டு வர இருக்கும் நிகழ்வுகளைக் கூறுவாராம். கிராம தேவதைகள் உள்ள இடங்களில் பலியிடும் பழக்கமும் சில இடங்களில் உள்ளன. பூஜை முறைகள் முற்றிலும் மாறுபட்டவை. வேத முறையை தவிர்த்து அகம முறையில் அவை செய்யப்படுகின்றன.

பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிஸ்ஸா போன்ற மானிலங்களில் மலைவாழ் மக்கள் அதிகம் வாழும் இடங்களைத் தவிற வட நாட்டில் கிராம தேவதைகள் என்று ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் சிவபெருமானின் கணங்கள் என நம்பும் யோகினிக்கள் மற்றும் மோகினிகள் என்பவர்கள் உள்ள ஆலயத்தையும், பாம்பு, காளி, முகம் மட்டும் தெரியும் பலவிதமான உருவம் கொண்ட சக்தி தேவிகள் மற்றும் பயங்கரமான தோற்றம் தந்தபடி நாயுடன் உள்ள பைரவர் போன்ற தெய்வங்களையே தம்மையும் தம் கிராமத்தையும் காக்கும் கடவுட்களாகப் போற்றுகின்றனர். இன்னும் பல கிராமங்களில் ஆஞ்சனேயரையே தம்மைக் காத்தருளும் கடவுளாகக் கருதி வழிபடுகின்றனர். எந்த ஒரு கிராமத்திலும் ஒரு பைரவர் அல்லது ஆஞ்சனேயர் சிலை இல்லாமல் இருக்காது.

ஒரு கருத்தரங்கில் ஆராய்ச்சியாளர் ஒருவர் தமது கருத்தை இப்படிக் கூறினார் “ இறந்து போனவர்களுடைய உடலை எரித்தப் பின் அந்த உடலில் இருந்து வெளிச் செல்லும் ஆத்மாக்கள் எதாவது ஒரு இடத்தில் சுற்றி அலையும் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. பேய் என்பது அவர்களைப் பொறுத்தவரை உலவும் ஆவிகள். அப்படி சுற்றித் திரியும் ஆவிகள் பாழடைந்த இடத்தில் முக்கியமாக பாறைகளிலும் சாலை ஒரத்தில் உள்ள புளிய மரத்தடியிலும் சென்று அமர்ந்து கொள்ளும். அப்பொழுது அந்த இடத்தில் எதேற்சையாகச் சென்று

அமரும் சிலர் அந்த ஆவிகளினால் பிடிக்கப்பட்டு அமானுஷ்ய சக்தி கொண்டு பேசுவதுண்டு. தான் அந்த இடத்தைக் காக்க வந்த பூதம் எனவும், தேவதை எனவும் அவை கூறும். அந்த இடங்கள் பெரும்பாலும் ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களாக இருந்ததால் அவை எல்லையை காக்க வந்துள்ள தேவதைகள் என நம்பப்பட்டு அந்த பாறை அல்லது கல் ஒரு தேவதை அல்லது பூதகணம் குடியுள்ள இடம் என நம்பப்பட்டு அவை பூஜிக்கப்பட்டன. அதுவே நாளடைவில் கிராம தேவதைகளாக உருப் பெற்றன. ஏன் எனில் இதுவரை எந்த கிராம தேவதை அல்லது பூத கணங்களைப் பற்றிய வரலாற்றுச் செய்தியோ, கல் வெட்டுக்களோ கிடையாது. பரம்பரை பரம்பரையாக நிலவிய வாய் மொழிக் கதைகள்தான் அவற்றின் ஆதாரங்கள். தமக்குக் கிடைத்த அங்கீகாரத்தினால் அந்த ஆத்மாக்கள் மனம் மகிழ்வடைந்து வேறு ஆத்மாக்கள் அங்கு வருவதை எதிர்க்கும். சிலருக்கு கனவில் ஒரு விதமான உருவமாக அது தெரியத் துவங்க அந்த கற்பனையில் கிடைத்த உருவத்தில் அந்த இடத்தில் உருவ பொம்மைகள் எழும்பத் துவங்கி அவை அந்த கிராமத்தை காக்கும் தெய்வமாகப் போற்றப்பட்டன.

அது மட்டும் அல்ல படிப்பறிவற்ற , பின்தங்கிய பல குக்கிராமங்களில் அந்த காலத்தில் வெள்ளத்தினால், இயற்கை சீற்றங்களினால், வியாதியினால், கொள்ளைக்காரர்களினால் மற்றும் பல்வேறு காரணங்களினால் மக்கள் துயருற்ற பொழுது அவர்களைக் காப்பாற்ற வீரச் செயல் புரிந்தவர், அதிசயங்கள் செய்து துயர் தீர்த்தவர் என எவராவது இருந்திருப்பார். அவர்கள் இறந்த பிறகு அவர்கள் அமர்ந்து இருந்த இடங்கள், வாழ்ந்திருந்த குடில் போன்றவை தம்மைக் காப்பாற்றிய அவர்களுக்கு மரியாதை செய்யும் இடமாயின. அந்த இடங்களில் அவர்களுடைய ஆத்மாக்கள் இருக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. தம்மைக் காத்த அவரே தெய்வமாக இருந்து இன்னும் காப்பாற்றுவார் என்ற எண்ணம் அவர்கள் மனதில் எழுந்தது. அவர் புகழை 'வில்லால் அடித்தார், வாளால் வெட்டினார், குதிரை மீது ஏறி வந்து துரத்தினார், பாய்ந்து பாய்ந்து அடித்தார்' என வில்லுப் பாட்டாகவும், ஒப்பாரிப் பாட்டாகவும் பாடி மகிழ்ந்தனர். விளைவு, அவர் புகழ் எங்கெல்லாம் பரவியதோ அங்கெல்லாம் அவர் கிராம நாயகனாக

மாறி காலப் போக்கில் ஒரு கடவுளாக, கிராம தேவதையாக உருவம் கொண்டார்.

இதற்கெல்லாம் மூல காரணம் அந்த காலங்களில் ஆலயங்களில் உள்ள கடவுட்களை பூஜிக்கவும், ஆலயங்களிலும் நுழையவும் அந்தணர் அல்லாதோருக்கு இருந்த தடைகள், தெய்வங்களை ஆராதிப்பதற்கு பிராமணர்கள் மட்டுமே தகுதி படைத்தவர்கள் என்ற மாயத் தோற்றங்கள், பயமுறுத்த ஏவி விடப்பட்ட தீய ஆத்மாக்கள், அவை கொடுத்த துயரங்கள் , அம்மை, வைசூரி போன்ற வியாதிகள், சமுதாயக் கொடுமைகள் என பலவற்றைக் கூறலாம். அவற்றை எல்லாம் தவிர்க்க அவ்வப் பொழுது ஏற்பட்ட உருவ வழிபாடுகள், அவற்றிற்கு பலி போன்றவை துவங்க, மெல்ல மெல்ல அந்த உருவங்களும் கிராமிய மக்களுக்கு தேவதைகளாக மாறின. இப்படியாக ஏற்பட்டவையே குதிரை வீரன், பேயாண்டி, மரியம்மா, பத்ரகாளி, இரத்தக் காட்டேரி, காத்தவராயன், காத்தாயி, மகமாயி, சூலி, போன்ற உருவங்கள். ஆலயங்களுக்கு சென்று கடவுளை வழி பட தடை செய்யப்பட்டவர்களுக்கு வடிகால் வேண்டாமா ? யாரிடம் சென்று தம்முடைய குறைகளைக் கூற இயலும் ? தம்மைக் காத்தருளுமாறு யாரிடம் வேண்ட முடியும் ? அதனால் ஏற்பட்டவையே இப்படிப்பட்ட கிராம தேவதைகள்.

இன்னும் ஒரு விஜித்திரமான செய்தி என்ன என்றால் கிராம தேவதைகள் பெரும்பாலும் பெண்ணினமாகவும், மிகக் குறைந்த அளவிலேயே ஆணினமாகவும் உள்ளன. அது ஏன் என கேட்டால் கிராம தேவதைகள் என்பவை முன் காலத்தில் பயிர்களைக் காப்பாற்றும் தேவதைகளாக கருதப்பட்டன. கருவுற்றப் பெண்கள் குழந்தைகளை பெற்றெடுப்பது போல ஒரு விதை பயிராகி, பயிர் வளர்ந்து தானியங்கள் தந்து உணவுக்கு வழி செய்கின்றது. கருவுற்ற பெண்மணிகள் ஆண்கள் முன்பு குழந்தைப் பெற முடியுமா ? ஆகவேதான் உணவு படைத்த பயிரினங்கள் பெண்ணினமாக கருதப்பட்டு அவற்றை காக்கும் தேவதைகள் பெண்ணினமாயின. அப்படி என்றால் அவை ஏன் பூதமாயின? அதற்கு காரணம் பூதாகாரமாக தோற்றம் தந்தவை அவை என்பதினால் பூதமாயின. பதினேழாம் நூற்றாண்டை சேர்ந்தவர் எனக் கூறப்படும் மதுரை வீரனைப் பொறுத்தவரை , தமிழ்நாட்டின் பல

கிராமங்களில் அவர் சிலைகள் உள்ளன. மாபெரும் வீரனான அவர் ஒரு மன்னனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார் எனவும், அவருடைய ஆவி மரணம் அடையாமல் மாலையில் அந்தி நேரத்தில் ஒரு குதிரை மீது ஏறி நகரில் ஊர்வலமாகச் செல்லும் எனவும், அந்த நேரத்தில் அவர் ஊருக்குள் நுழையும் தீய ஆவிகளை அடித்து விரட்டுவார் எனவும் நம்பிக்கை உள்ளதினால், அவரை ஆராதிப்பதின் மூலம் அவர் அந்த கிராமத்தைப் பாதுகாத்து வருவார் என நம்பினர். ”



கிராம தேவதைகள், பூதகணங்கள், மற்றும் மாயா ஆவிகளின் தோற்றம்

*பின் குறிப்பு: இந்த செய்திகள் அனைத்தும் நான் சென்ற ஆலயங்களில் பலரிடம் இருந்தும் கேட்டு அறிந்த அவர்களுடைய நம்பிக்கையான செய்திகள். மேலும் சில சொற்பொழிவுகளில் கேட்டவை. இது பற்றிய சரித்திர.:.புராண விவரம் மேலும் கிடைத்தால் எனக்கு* nrj1945@gmail.com *என்ற முகவரிக்கு* E mail *செய்தால் நன்றியாக இருக்கும்.*